1971 அக்டோபர் 25]

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, விவசாய தீவிர சாகுபடி திட்டத்தின் மூலம் அதிக உற்பத்தியில் அக்கறை இருக்கும்போது, நவீன முறையில் சாகுபடிசெய்து உற்பத்தியை அதிகரிக்க முறைகள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றனவா ? அது சம்பந்தமாக வெளிநாடுகளோடு தொடர்பு கொண்டு செயல் பட வாழை உற்பத்தி அதிகாரிகளுக்கு வழி செய்யப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய திட்டம் இருக்கிறது. நவீன முறையில் சாகுபடி செய்யவும் திட்டம் இருக் கிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் விஸ்தரிப்புத் திட்டம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்கள். ஊராட்சி ஒன்றிய விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, விவசாயிகளிடத்தில் விவரங்களைச் சொல்லி ஊக்குவிக்கும் சூழ்நிலை இல்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தில் இதை அமுல் படுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் பூராவும் இந்தத் திட்டம் செயல்படவில்லை. ஒவ்வொரு பகுதிகளில் எடுக்கப் பட்டிருக்கிறது. 1968-69-ல் 6,300 ஏக்கராவும், 1969-70-ல் 3,771 ஏக்கராவிலும், 1970-71-ல் 4,333 ஏக்கராவிலும் விவசாயம் செய்யப் படுகிறது. பயிர் சுழல் முறையில் செய்யப் படுவதால், அதில் கொஞ்சம் குறைவு ஏற் படுகிறது.

திரு. எம். முத்தையா: தலைவர் அவர்களே, இந்த வாழையானது, பங்குனி, சித்திரை, அக்கினி நட்சத்திர காலத்தில், வெப்பமான நிலையில், குலைகள் தள்ளும். அப்பொழுது இவை திமர் திமரென்று சாய்கின்றன. அதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகையினால், அதற்கு ஒரு 'ஏர்-கண்டிஷன்' முறையை ஆராய்ச்சிசெய்து ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதற்கு ஏர்-கண்டிஷன் தேவை யில்லை. அதற்காகத்தான் முன்பே சொன்னார்கள், 'பருவத்தே பயிர் செய்' என்று.

*** 63 வினா.—திரு. ஏ. எம். இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் தீவிர வாழை சாகுபடித் திட்டம் கோவை மாவட்டத்தில் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் 1965-66 ஆம் ஆண்டிலிருந்து, ஏற்றுமதிக்கான வாழை உற் பத்தித் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்திட்டம், ஈரோடு, தாரா

புரம், கோபி, கோயம்புத்தூர் ஆகிய தாலுக்காக்களில் செயல்பட்டுவருகிறது. ஏற்றுமதிக்கான வாழை வகைகளைப் பயிரிட இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின்கீழ், சாகுபடியாளர்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 1,000 வீதம் கடன் வசதி அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா : ஏற்றுமதிக்கான திட்டம் செயல்பட்டு வருகிறது. ஆனால் கோவை மாவட்டத்தில் இந்த வாழைப்பழத்திற்கு மார்க்கெட்டு கிடையாது. விற்பனை செய்ய மிகவும் சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. வெளி நாட்டுக்கு அனுப்பவும் வியாபாரிகள் வந்து வாங்குவதில்லை. இந்த நிலையைப் போக்க, அரசு அங்கேயிருக்கிற குட்டை வாழை பயிர்செய்யும் விவசாயிகளிட மிருந்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வாழைப்பழத்தை அரசே வாங்கி அனுப்ப ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இன்னமும் உற்பத்தி பெருகவில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, வெளிநாடுகளுக்கு குட்டை வாழை தவிர வேறு எந்த வாழை ரகங்கள் ஏற்றுமதியாகின்றன ? இதனால் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இன்னமும் ஏற்றுமதி ஆக வில்லை என்பதைச் சொன்னேன். ஆகவே, இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஓ. என். சுந்தரம் : தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் விளையும் வாழை மருந்து சம்மந்தமானது என்பது பிரசித்தமானது. ஆகவே, திண்டுக்கல்லும் இதில் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படியொன்றும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 'மொரிஷஸ்' வாழை என்கிற இந்தக் குட்டை வாழைக்கு கன்றுகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஒரு சில இடங்களில்தான் கிடைக்கிறது. ஏற்றுமதியில் இவ்வளவு அக்கரைகாட்டும் அரசு, இந்த வாழைக் கன்றுகள் மலிவான விலையில் விவசாயிகளுக்குக் கிடைக்க வழிவகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தரமலிங்கம் : கன்றுகளும் உற்பத்தி செய்யப் படுகின்றன. தேவைப்படுவோர்களுக்குக் கொடுக்க கவனம் செலுத்தப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Has this Government investigated the possibility of exporting vitaminised banana powder and may I know whether they have proposals to manufacture this.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்சமயம் இல்லை.